Crl.Misc/39

# DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)

IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE

VALANGAIMAN

Calendar

Miscellaneous **Case No. CC. 01/2025**

Preliminary Register

Deposition of **PW- 4 LW-3**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| Name | : | அனுசியா | Father Name | : | நடராஜன் |
| Village | : | கோவிந்தகுடி | Taluk | : | வலங்கைமான் |
| Caste | : | | Calling | : | வீட்டுக்குடித்தனம் |
| Religion | : | | Age | : | 33 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of 22nd day of September 2025.

எதிரிகள் ஆஜர். எதிரிகள் தரப்பு வழக்கறிஞர் முன்னிலை.

**<u>முதல் விசாரணை-</u>**

நான் மேற்படி முகவரியில் வசித்து வீட்டுக்குடித்தனம் செய்து வருகிறேன். அ.சா.1 எனது கணவர் ஆவார். ஆஜர் எதிரிகளை தெரியும். அவர்கள் எனது பக்கத்து வீட்டுக்காரர்கள். ஆஜர் எதிரிகள் எங்களின் இடத்தில் எங்கள் வீட்டிற்கு மேல்புறமாக அவர்கள் வீட்டின் சுவர் வைத்துள்ளனர். இது தொடர்பாக எங்கள் இரு குடும்பத்திற்குள் பிரச்சனை இருந்து வந்தது. இந்நிலையில் கடந்த 18.06.2024 ம் தேதி மாலை 5 லிருந்து 6 மணிக்குள் மழை வருவது போல் இருந்தது. அதனால் கொல்லை புறம் உள்ள வைக்கோல் போரை மூடுவதற்காக எனது கணவரும் எனது மாமனார் ரமேஷ் அவர்களும் கொல்லைபுறம் சென்றனர். அப்போது ஆஜர் 1வது எதிரி கெட்ட வார்த்தை சொல்லி திட்டியும் ஜாதி பெயரை சொல்லியும் திட்டினார். முதலில் அவர்

யாரை திட்டுகிறார் என்று தெரியவில்லை. ஜாதி பெயர் சொல்லி திட்டியதும்தான் எங்களை திட்டுவது தெரிந்தது. ஏன் திட்டினாய் என்று எனது கணவரும் எனது மாமனாரும் கேட்டபோது விக்னேஷ் கல்லால் எனது கணவரையும் மாமனாரையும் அடித்தார். எங்கள் இரு வீட்டிற்கும் இடையில் கம்பிவேலி உள்ளது எனது மாமனாரும் கணவரும் கொல்லைபுறத்திலிருந்து தெருபக்கம் வந்தார்கள். ஆஜர் எதிரிகள் இருவரும் அவர்கள் வீட்டு சந்திலிருந்து தெருபக்கம் வந்தார்கள். வரும்போதே ஆஜர் எதிரி விக்னேஷ் தேங்காய் உரிக்கும் பாரையை எடுத்து வந்து எனது கணவரை தலையில் குத்த வந்தார் அதை எனது கணவர் தடுத்ததில் எனது கணவருக்கு இடது உள்ளங்கையில் பாரை குத்தி காயம் ஏற்பட்டது. இரத்தம் கையிலிருந்து வழிந்துகொண்டிருந்த நிலையிலும் ஆஜர் எதிரி விக்னேஷ் எனது கணவரை அடித்தார். எனது நாத்தனார் சம்பவம் குறித்து 100 க்கு போன் செய்தார். சற்ற நேரம் கழித்து போலீசார் அங்கு வந்தார்கள். விபரத்தை சொன்னோம். எதிரிகள் இருவரும் எதிர்புறம் வீட்டில் இருந்தார்கள். போலீசார் இருக்கும் போது ஆஜர் எதிரிகள் இருவரும் சுமார் 20 நபர்களை அழைத்து வந்து போலீஸிடம் எப்படி சொல்லலாம் என்று அடித்தார்கள். அப்போது எதிரிகளுடன் வந்த நபர்களும் அடித்தார்கள். ஆஜர் எதிரிகள் அழைத்து வந்த நபர்கள் என்னையும், எனது கணவர், எனது மாமனார், மாமியார் ஆகியோர்களையும் அடித்தார்கள். சம்பவத்தின்போது நான் கருவுற்று இருந்தேன். ஆம்புலன்ஸிற்கு போன் செய்தோம். ஆம்புலன்ஸ் வர தாமதாமானதால் காயம்பட்ட நாங்கள் நால்வரும் ஆட்டோவில் கும்பகோணம் அரசு மருத்துவமனைக்கு சென்றோம். மேற்படி மருத்துவமனையில் நானும் உள்நோயாளியாக சிகிச்சையில் இருந்தேன். சிகிச்சையில் இருந்த போது அன்றைய தினம் இரவு 12 மணியளவில் வலங்கைமான் போலீசார் எங்களை விசாரணை செய்தார்கள். நானும் புகார் வாக்குமூலம் கொடுத்தேன். எனது கணவரும் புகார் வாக்குமூலம் கொடுத்தார். எனது கணவர் கொடுத்த புகார் வாக்குமூலத்தின் அடிப்படையில் வழக்கு பதிவு செய்தனர். சம்பவ சமயத்தில் எதிரிகளுடன் வந்த நபர்கள் என்னை கீழே தள்ளினார்கள். அப்போது நான் 3 மாத கர்ப்பமாக இருந்ததால் எனது கருவிற்கு ஏதும் பாதிப்பு ஏற்படுமோ என்று எனக்கு பயமாக இருந்தது.

அதனால் நான் மருத்துவமனைக்கு சென்று சிகிச்சைக்கு சேர்ந்தேன். போலீசார் என்னை விசாரணை செய்தார்கள்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை -**

எனது கணவர் இன்று என்னுடன் இங்கு வந்துள்ளாரா என்றால் வந்துள்ளார். எனது கணவர் ஏற்கணவே நீதிமன்றத்தில் ஆஜராகி சாட்சியம் அளித்துள்ளார் என்றால் சரிதான். என்ன சாட்சியம் அளித்துள்ளார் என்று என்னிடம் சொல்லியுள்ளாரா என்றால் சொல்லியுள்ளார். நான் முதல் விசாரணையில், " மாலை 5 லிருந்து 6 மணிக்குள் மழை வருவது போல் இருந்தது. அதனால் கொல்லை புறம் உள்ள வைக்கோல் போரை மூடுவதற்காக எனது கணவரும் எனது மாமனார் ரமேஷ் அவர்களும் கொல்லைபுறம் சென்றனர். அப்போது ஆஜர் 1வது எதிரி கெட்ட வார்த்தை சொல்லி திட்டியும் ஜாதி பெயரை சொல்லியும் திட்டினார். முதலில் அவர் யாரை திட்டுகிறார் என்று தெரியவில்லை. ஜாதி பெயர் சொல்லி திட்டியதும்தான் எங்களை திட்டுவது தெரிந்தது. ஏன் திட்டினாய் என்று எனது கணவரும் எனது மாமனாரும் கேட்டபோது விக்னேஷ் கல்லால் எனது கணவரையும் மாமனாரையும் அடித்தார். எங்கள் இரு வீட்டிற்கும் இடையில் கம்பிவேலி உள்ளது எனது மாமனாரும் கணவரும் கொல்லைபுறத்திலிருந்து தெருபக்கம் வந்தார்கள். ஆஜர் எதிரிகள் இருவரும் அவர்கள் வீட்டு சந்திலிருந்து தெருபக்கம் வந்தார்கள். வரும்போதே ஆஜர் எதிரி விக்னேஷ் தேங்காய் உரிக்கும் பாரையை எடுத்து வந்து எனது கணவரை தலையில் குத்த வந்தார் அதை எனது கணவர் தடுத்ததில் எனது கணவருக்கு இடது உள்ளங்கையில் பாரை குத்தி காயம் ஏற்பட்டது. இரத்தம் கையிலிருந்து வழிந்துகொண்டிருந்த நிலையிலும் ஆஜர் எதிரி விக்னேஷ் எனது கணவரை அடித்தார். எனது நாத்தனார் சம்பவம் குறித்து 100 க்கு போன் செய்தார். சற்ற நேரம் கழித்து போலீசார் அங்கு வந்தார்கள். விபரத்தை சொன்னோம். எதிரிகள் இருவரும் எதிர்புறம் வீட்டில் இருந்தார்கள். போலீசார் இருக்கும் போது ஆஜர் எதிரிகள் இருவரும் சுமார் 20 நபர்களை அழைத்து வந்து போலீஸிடம் எப்படி சொல்லலாம் என்று அடித்தார்கள். அப்போது எதிரிகளுடன் வந்த நபர்களும்

அடித்தார்கள். ஆஜர் எதிரிகள் அழைத்து வந்த நபர்கள் என்னையும், எனது கணவர், எனது மாமனார், மாமியார் ஆகியோர்களையும் அடித்தார்கள்" என்று கூறியுள்ள விபரங்களை போலீசார் விசாரணையில் கூறவில்லை என்றால் சரியல்ல போலீசார் விசாரணையில் மேற்படி விபரங்களை கூறியுள்ளேன். நான் முதல் விசாரணையில் கூறியுள்ள, " ஆம்புலன்ஸ் வர தாமதாமானதால் காயம்பட்ட நாங்கள் நால்வரும் ஆட்டோவில் கும்பகோணம் அரசு மருத்துவமனைக்கு சென்றோம். மேற்படி மருத்துவமனையில் நானும் உள்நோயாளியாக சிகிச்சையில் இருந்தேன். சிகிச்சையில் இருந்த போது அன்றைய தினம் இரவு 12 மணியளவில் வலங்கைமான் போலீசார் எங்களை விசாரணை செய்தார்கள். நானும் புகார் வாக்குமூலம் கொடுத்தேன். எனது கணவரும் புகார் வாக்குமூலம் கொடுத்தார். எனது கணவர் கொடுத்த புகார் வாக்குமூலத்தின் அடிப்படையில் வழக்கு பதிவு செய்தனர். சம்பவ சமயத்தில் எதிரிகளுடன் வந்த நபர்கள் என்னை கீழே தள்ளினார்கள். அப்போது நான் 3 மாத கர்ப்பமாக இருந்ததால் எனது கருவிற்கு ஏதும் பாதிப்பு ஏற்படுமோ என்று எனக்கு பயமாக இருந்தது. அதனால் நான் மருத்துவமனைக்கு சென்று சிகிச்சைக்கு சேர்ந்தேன்" என்ற விபரத்தினை போலீசார் விசாரணையில் கூறவில்லை என்றால் சரியல்ல போலீசார் விசாரணையில் மேற்படி விபரங்களை கூறியுள்ளேன். நான் மருத்துவரிடம் என்னை 20 நபர்களக்கு மேல் தாக்கினார்கள் என்ற விபரத்தையும் எனக்கு சிகிச்சை அளித்த மருத்துவரிடம் கூறியுள்ளேனா என்றால் கூறியுள்ளேன். நான் எத்தனை நாட்கள் சிகிச்சையில் இருந்தேன் என்றால் 18ம் தேதியிலிருந்து 21ம் தேதிவரை சிகிச்சையில் இருந்தேன். அதுபோல் நான் சிகிச்சையில் இல்லை என்றாலும் வழக்கிற்காக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும் சரியல்ல. என்னிடம் நான் சிகிச்சை பெற்றதற்கான மருத்துவ சான்றிதழ் உள்ளது. போலீசார் விசாரித்தபோது என்னிடம் உள்ள மருத்துவ சான்றிதழை போலீசாரிடம் கொடுத்தேனா என்றால் அவர்களிடம் கொடுத்தேன், அவர்களிடம்தான் உள்ளது. நான் சொல்வதுபோல் எந்தவித சம்பவமும் நடைபெறவில்லை என்றாலும் எதிரிகள் யாரும் எனது கணவரையும் எங்கள் குடும்பத்தாரையும் தாக்கவில்லை என்றாலும் சரியல்ல. முன்விரோதம் காரணமாக

எனது கணவர் கொடுத்த பொய்புகாருக்கு ஆதரவாக பொய்சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. நான் உண்மையைதான் கூறுகிறேன். என்னை யாரும் தாக்கவில்லை என்றாலும் எனக்கு எவ்வித காயமும் ஏற்படவில்லை என்றாலும் சரியல்ல.

**மறுவிசாரணை - இல்லை**

என்னால் சொல்லப்பட்டு என்னுடைய மேற்பார்வையில் என்னுடைய ஆணையின் கீழ் என் முன்னிலையில் தட்டச்சு செய்யப்பட்டு எதிரியின் முன்னிலையில் சாட்சிக்கு விளக்கப்பட்டு சாட்சியால் சரியென ஒப்புக் கொள்ளப்பட்டது.

JESU BALAN

Digitally signed by JESU BALAN
Date: 2025.09.22 16:38:33 +0530

மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நீதித்துறை நடுவர்,
வலங்கைமான்.

Crl.Misc/ 39

# DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)

IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE VALANGAIMAN

Calendar

Miscellaneous **Case No. CC. 01/2025**

Preliminary Register

Deposition of **PW-5 LW-6**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| Name | : | சரவணன் | Father Name | : | கருணாநிதி |
| Village | : | கோவிந்தகுடி | Taluk | : | வலங்கைமான் |
| Caste | : | | Calling | : | விவசாயம் |
| Religion | : | | Age | : | 45 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of 22nd day of September 2025.

எதிரிகள் ஆஜர். எதிரிகள் தரப்பு வழக்கறிஞர் முன்னிலை.

**முதல் விசாரணை-**

நான் மேற்படி முகவரியில் வசித்து விவசாயம் செய்து வருகிறேன். அ.சா.1 , அ.சா.2, அ.சா.4 ஐ தெரியும். ஆஜர் எதிரிகளை தெரியும். அவர்களுக்குள் என்ன பிரச்சனை என்று எனக்கு தெரியாது. என்னிடம் காட்டப்படும் பார்வை மகசரில் நான் கையொப்பம் எதுவும் செய்யவில்லை. இன்றிலிருந்து சுமார் 1 மாதத்திற்கு முன்பு எங்கள் தெருவில் சத்தமாக இருந்தது. நான் வந்து பார்த்தபோது அ.சா.4 ஐ ஆட்டோவில் ஏற்றினார்கள். போலீசார் என்னை வந்து எப்போது வந்தேன் என்று கேட்டார்கள். என்னிடம் கையொப்பம் எதுவும் வாங்கவில்லை.

**சாட்சி அரசு தரப்பு வழக்கிற்கு அனுசரணையாக சாட்சியமளிக்காததால் அரசு தரப்பில் பிறழ் சாட்சியாக கருதி குறுக்கு விசாரணை செய்ய அனுமதி கோரியதன் பேரில் அனுமதி அளிக்கப்பட்டது.**

ஆஜர் எதிரிகள் குடும்பத்திற்கும் அசா.1 குடும்பத்திற்கும் இடையில் இடப்பிரச்சனை உள்ளது என்று சொன்னால் அதுபற்றி எனக்கு தெரியாது. கடந்த 18.06.2024ம் தேதி ஆஜர் எதிரிகளுக்கும் அ.சா.1, அ.சா.4க்கம் இடையே பிரச்சனை நடந்த சம்பவயிடத்தை 19.06.2024ம் தேதி மதியம் 1.00 மணியளவில் நானும் மனோபாலாவும் அ.சா.1ன் வீட்டருகே நின்று கொண்டிருந்தபோது சம்பவயிடத்தை எங்கள் முன்னிலையில் பார்வையிட்டு போலீசார் பார்வை மகசர் தயார் செய்தார்கள் என்று போலீசார் விசாரணையில் சொல்லியுள்ளேன் என்றால் சரியல்ல. ஆஜர் எதிரிகள் எனது உறவினர்களா என்றால் இல்லை. ஆஜர் எதிரிகள் எனது ஊர்காரர்கள் என்பதால் உண்மையை மறைத்து எதிரிகளுக்கு ஆதரவாக பொய்சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை - இல்லை.**

**மறுவிசாரணை - இல்லை**

என்னால் சொல்லப்பட்டு என்னுடைய மேற்பார்வையில் என்னுடைய ஆணையின் கீழ் என் முன்னிலையில் தட்டச்சு செய்யப்பட்டு எதிரியின் முன்னிலையில் சாட்சிக்கு விளக்கப்பட்டு சாட்சியால் சரியென ஒப்புக் கொள்ளப்பட்டது.

JESU BALAN
Digitally signed by JESU BALAN
Date: 2025.09.22 16:38:44 +0530

மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நீதித்துறை நடுவர்,
வலங்கைமான்.